*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (1)**
**November 2018**

# திருக்குறள் எடுத்துரைக்கும் இல்லறநெறிகள்

**அமுதவல்லி.ந**
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்.
தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

வள்ளுவர் அறத்துப்பாலில் ஆணும், பெண்ணும் இணைந்து ஒன்று கூடி வாழக் கூடிய இல்லற வாழ்வில் இல்வாழ்வான் பின்பற்றக் கூடிய நெறிமுறைகள், மனைத்தக்காளின் அதாவது வாழ்க்கைத் துணைநலமாக வாழக் கூடிய பெண்ணுக்குரிய நெறிமுறைகள், இவர்கள் இருவரின் ஒரு மித்த அன்பு கலந்த வாழ்க்கையில் கிடைக்கும் இல்லற வாழ்க்கையின் பயனான நன்மக்கட் பேறு, மற்றும் விருந்தோம்பல் பண்பை மேற்கொண்டு வாழக் கூடிய நெறிமுறைகள் என்று பலவிதமான கருத்துகளை எடுத்துரைத்துள்ளார்.

**முன்னுரை**

உலக இலக்கியங்களில் தலைசிறந்த நூல் திருக்குறளாகும். இதனால் இந்நூல் ‘உலகப்பொதுமறை’ என அழைக்கப்படும் சிறப்பைப் பெறுகிறது. மனித சிந்தனையின் சிறந்த கருவூலமாகத் திகழ்கின்றது. தமிழ் இலக்கியங்களில் மிக அதிகமாக பிற மொழிகளுக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட ஒரே இலக்கியம் திருக்குறள் மட்டுமே. தமிழினத்தின் நாகரீக வளர்ச்சியின் உயர்வையும், வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் விளக்குகின்றது. இத்தகைய பெருமைக்கும் சிறப்பிற்கும் உள்ள இந்நூலில் இடம் பெறும் இல்லறநெறிகள் குறித்து ஆராய இக்கட்டுரை முயல்கின்றது.

**இல்வாழ்வானின் கடமைகளும், சிறப்புக்களும்**

இல்லற வாழ்க்கை மேற்கொள்ளக் கூடிய ஒருவன் தனது பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவருக்கும் உறுதியாக நிலைத்து நின்று உதவி செய்யக் கடமைப்பட்டவன் ஆவான். மேலும் அவன் அறவழியில் நெறிமுறைப்படி துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர்களுக்கும், ஏழ்மை நிலையிலும் அறநெறி வாழ்வைக்

கடைபிடித்து வாழக் கூடியவர்களுக்கும், பிறர் ஆதரவின்றித் தன்பால் அடைக்கலம் புகுந்தவர்களும் உதவி செய்யக் கடமைப்பட்டவன் ஆவான். தனது குடும்ப முன்னோர்கள், தெய்வம், அறவாழ்க்கை வாழும் ஆன்றோர்களாகிய விருந்தினர்கள், உறவினர்கள், தன் குடும்பம் என்ற ஐந்து தன்மைகளையும் அறவழியில் போற்றி, பாதுகாக்கின்ற செயல்களைச் செய்வது இல்லறத்தானின் முக்கிய கடமைகளாகும். பொருள் ஈட்டும் போது பழி, பாவத்திற்கு அஞ்சி நல்வழியில் பொருளைச் சேர்த்து, அதனை அனைவருக்கும் பகிர்ந்து அளித்து உணவு உண்பவனின் குழந்தைகள் ஒரு நாளும் துன்பப்பட்டு வருந்துதல் இல்லை. அன்பையும், அறிவையும் துணையாகக் கொண்டு வாழக் கூடிய இல்லற வாழ்க்கை சிறப்பும் பயனும் நிறைந்த உயிரோட்டமான வாழ்க்கையாக அமையும். இவ்வாறு வாழ்வதை விட்டு செல்வம் சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டால், அந்த நோக்கம் உண்மையான அன்பினை அழிக்கும்; பண்பைக் கெடுக்கும்; உறவைச் சீர்குலைக்கும், இன்பம் பெறுவதை நோக்கமாகக் கொண்டால் அன்பு நீங்கும்; ஆசை பெருகும்; குடும்ப அமைதி கெடும். இதனை வள்ளுவர்,

> ‘‘அறத்துஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்துஆற்றின்
> போஒய்ப் பெறுவன் எவன்?’’ [1]

என்று குறிப்பிடுக்கின்றார. ˙அறவழியில் இல்வாழ்க்கை வாழ்பவன், பிறவழிகளில் வாழ்பவர்களை விடவும் தலைசிறந்தவனாவன். இதனை வள்ளுவர்,

> ‘‘இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
> முயல்வாருள் எல்லாம் தலை’’ [2]

என்று எடுத்துரைக்கின்றார். மேலும் அவர்,

> ‘‘ஆற்றின் ஒழுக்கி, அறன்இழுக்கா இல்வாழ்க்கை
> நோற்பாரின் நோன்மை உடைத்து’’ [3]

என்று இல்லறத்தானின் வாழ்க்கை துறவற வாழ்க்கையை விடச் சாலச் சிறந்தது என்றுரைக்கின்றார். அறநெறிப்படி இல்லற வாழ்க்கை வாழ்பவன் வானுலகத்தில் வாழும் தேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவான் என்று இல்லறத்தானுக்குச் சிறப்புச் சேர்க்கின்றார் வள்ளுவர்.

**மனைத்தக்காள் மாண்புகள்**

இல்லற வாழ்வில் வாழக் கூடிய பெண் இரக்க குணம் பொருந்தியவளாக, கணவனின் வருவாய்க்கு ஏற்றவாறு செலவு செய்து இல்லற வாழ்க்கையை இனிமையாக நடத்துபவளாக இருக்க வேண்டும். பொறுமையும், அன்பும் நிறைந்தவளாக, நற்பண்பு மிக்கவளாக வாழ்க்கைத் துணைவி அமையவேண்டும்.

இல்லையென்றால் ஒருவனுடைய வாழ்க்கை எவ்வாறு சிறப்புடையதாக இருந்தாலும் எந்த பயனும் இல்லை என்பதை,

'மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை

எனை மாட்சித்து ஆயினும் இல்'' [4]

என்று கூறுகின்றார்.

தொல்காப்பியரும் பெண்ணின் நற்குணங்களாகக்

''கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்

மெல்லியற் பொறையும் நிறையும் வல்லதின்

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'' [5] எனக் கூறியுள்ளார்.

மனைவி மனைத்தக்க மாட்சிமைத் தன்மை உடையவளாக இருந்தால் வளமான வாழ்வு அமையும். கருத்து வேறுபாடுகள் நிறைந்த வாழ்க்கை அமைந்தால் அந்த வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையாகி விடும். பெண் கற்புநெறி காத்து இல்லற வாழ்க்கை வாழ வேண்டும். அத்தகைய வாழ்க்கை பெருமைக்கும், சிறப்பிற்கும் உரிய நிலைபேறுடைய வாழ்க்கையாக அனைவராலும் போற்றப்படக்கூடிய வாழ்க்கையாக அமையும். பெண் தனது கணவனைத் தெய்வமாக வணங்க வேண்டும். அவ்வாறு வணங்கினால் இயற்கையும் கூட அவள் சொல்லுக்குக் கட்டுப்பட்டதாகச் செயல்படும் என்பதை,

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை'' [6]

என்று குறிப்பிடுகின்றார். பெண் கற்பு நெறியில் இருந்து வழுவாமல் தன்னையும் காத்து, தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காத்துச் சோர்வு அடையாமல் வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தவள் சிறந்த இல்லறத்தாளாகக் கருதப்பட்டாள் என்பதை வள்ளுவர்,

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்வு இலாள் பெண்'' [7]

என்று கூறுகின்றார். 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' [8] என்று பாரதி பாடுவது போல வள்ளுவர் காலத்திலும் பெண்ணை வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கும் நிலை இருந்தது. அந்த எண்ணம் தவறானது என்பதை வள்ளுவர்,

''சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை'' [9]

என்று எடுத்துரைக்கின்றார். பெண்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் காப்பே சாலச் சிறந்தது. மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் ஆகும். நல்ல மக்களைப் பெறுதல் அதற்கு நல்ல அணிகலன் ஆகும் என்று கருத்துரைக்கின்றார் ''இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை'' என்ற பொன்மொழியால் இல்லாளின் சிறப்பை அறியலாம். பெண்களுக்குப் புகழ் தரும் கற்பு குணம் நிறைந்த மனைவியால் சமுதாயத்தில் கணவனின் மதிப்பு உயருகின்றது. மனைவி அப்படி அமையவில்லையெனில் அவனது ஏறு போன்ற நடையும் மாறுபட்டுப் போகின்றது.

**மக்கட்பேறு**

இல்லற வாழ்வின் பயன் நன்மக்களைப் பெறுதலேயாகும். மனிதன் பெறுகின்ற செல்வங்களுள் தலையாயது அறிவுடைய மக்களைப் பெறுவதாகும் என வள்ளுவர்,

''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற'' [10]

என்று கூறுகின்றார். மாசற்ற பண்பு நிரம்பிய மக்களைப் பெற்றவருக்கு ஏழு பிறவிகள் வரை தீவினைப் பயன்கள் துன்பங்கள் அணுகாது என்ற அக்கால நம்பிக்கையையும் வள்ளுவர்,

''எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்'' [11]

என்று பதிவு செய்துள்ளார். தம்முடைய மக்களின் சிறு கைகளால் துழாவப் பெற்ற உணவு, பெற்றோர்க்கு அமிழ்தினும் இனிமையானதாகும்.

தம் மக்கள் அறிவுடையவராயிருத்தல் பெற்றோர்க்கு நன்மையையும், இவ்வுலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் நன்மையையும் தருவதாகும். தான் பெற்ற மைந்தனை அறிவு, ஒழுக்கங்கள் நிறைந்த சான்றோன் என்று அறிவுடையோர் புகழ்ந்து கூறக் கேட்ட தாய், அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி அடைந்தாள். என்றும் மக்கட்பேறின் சிறப்புத் தன்மையை விளக்குகின்றார். தன்னைப் பெற்று வளர்த்துக் கல்வியறிவூட்டிச் சிறப்படையச் செய்த பெற்றோருக்கு மகன் செய்ய வேண்டிய நன்றி என்னவென்றால் இப்படிப்பட்ட அறிவும் நற்குணமும் உள்ள மகனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ? என்று உலகத்தார் சொல்லும் புகழுரை தான் என்று இல்லறவாழ்வில் மகனின் கடமையையும் நினைவூட்டுகின்றார் வள்ளுவர்.

**அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை**

காதலால் ஒன்றுபட்ட ஆணும், பெண்ணும் ஆகிய இரண்டு உயிர்களும் ஓர் உயிர் போல் அறநெறியில் வாழ்க்கை நடத்துவதே இல்வாழ்க்கை எனப்படும். இத்தகைய இல்லற வாழ்க்கையில் பிறரால் பழிக்கப்படாமல் வாழ்வது மிகவும் சிறப்பிற்குரிய செயலாகும். இத்தகைய இல்லற வாழ்க்கை அன்பும், அறனும் நிறைந்ததாக இருக்க வேண்டும். அன்போடு கூடிய இல்லற வாழ்க்கை வாழ்கின்றவன் இல்லற ஒழுக்க நெறியில் இருந்து தவறக் கூடாது என்பதையும் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

''அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையான்
பெண்மை நயவாமை நன்று'' [12]

''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுங்கு'' [13]

என்று பிறன்மனை நயத்தலால் ஏற்படும் கேடுகளை வள்ளுவர் சுட்டுகின்றார். பிறன் மனைவியை விரும்புவது நல்வழி கிடையாது. நிறைந்தப் புகழைத் தராது. ஒருவன் எந்த நல்ல காரியமும் செய்யாமல் தீச் செயலே புரிபவனாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் அவன் பிறன் மனைவியை விரும்பாது வாழ்பவனாய் இருந்தால் போதும் என்கிறார் வள்ளுவர். இல்லற வாழ்வில் ஒருவன் பிறரின் மனையாளை விரும்பாமல் இருத்தலே சிறந்த அறமாகக் கருதப்படுகிறது.

இல்லறத்தோடு பொருந்தி வாழக்கூடிய வாழ்க்கையே ஒரு மனிதனுக்கு வாழ்வில் இன்பம் தரும் என்பதை,

'அறத்தான் வருவதே இன்பம்' [14]

என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகின்றார்.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்ற உயர்ந்த பண்பு இல்வாழ்வானுக்குரிய மிகச் சிறந்த கடமையாகக் காலங்காலமாகப் போற்றப்பட்டு வந்துள்ளது. வள்ளுவரும் இதனைத் தன் குறட்பாக்களில் விளக்குகின்றார்.

''இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு'' [15]

இல்வாழ்க்கையே வந்த விருந்தினரை உபசரித்து அவா்களுக்கு விருந்து அளிப்பதற்காகத் தான் என்று விருந்தோம்பலின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றாா். ஒருவன் தான் உண்பது சாவாமைக்குக் காரணமாகிய அமிழ்தமேயானாலும் விருந்தினா் புறத்தே இருக்கத் தான் மட்டும் தனித்து உண்ணல் விரும்பத் தக்கது ஆகாது என்று விளக்குகின்றாா். விருந்தோம்பல் பண்பை மேற்கொள்பவனுடைய வாழ்க்கையில் வறுமை, துன்பம் என்றும் இல்லையென்றும், அவன் இல்லத்தில் திருமகள் மனமகிழ்ந்து வாழ்வாள் என்றும் அக்கால மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகளையும் வள்ளுவா் தனது குறட்பாக்களில் பதிவு செய்துள்ளாா்.

**முடிவுரை**

திருக்குறள் எடுத்துரைக்கும் இல்லறம் குறித்த கருத்துக்கள் இன்றைக்கும் ஒவ்வொரு தனிமனிதன் வாழ்க்கையிலும் நல்லறிவு புகட்டும் தன்மையில் அமைந்துள்ளன. ஒவ்வொரு இல்லறத்தானும், மனைத்தக்காளும் எத்தகைய கடமை உணா்வுகளோடும் பொறுப்புணா்வோடும் செயல்பட வேண்டும் என்ற வாழ்வியல் உண்மைகளை இனங் காட்டுகின்றன. எல்லாக்காலமும் சமூகம் வளம் பெற்று விளங்க பல அரிய நற்கருத்துக்களை வழங்குகின்றன.

**அடிக்குறிப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குறள்-குறள் எண் | : | 46 |
| 2. | மேலது,குறள் எண் | : | 47 |
| 3. | மேலது,குறள் எண் | : | 48 |
| 4. | மேலது,குறள் எண் | : | 52 |
| 5. | தொல்காப்பியம், பொருளாதிகாரம், கற்பியல் நூற்பா.எண் | : | 150 |
| 6. | திருக்குறள்-குறள் எண் | : | 55 |
| 7. | மேலது,குறள் எண் | : | 56 |
| 8. | பாரதியாா் கவிதைகள், பெண்கள் விடுதலைக்கும்மி (பாடல்வரி) | : | 7-8 |
| 9. | திருக்குறள்-குறள் எண் | : | 57 |
| 10. | மேலது,குறள் எண் | : | 61 |
| 11. | மேலது,குறள் எண் | : | 62 |
| 12. | மேலது,குறள் எண் | : | 150 |
| 13. | மேலது,குறள் எண் | : | 148 |
| 14. | மேலது,குறள் எண் | : | 39 |
| 15. | மேலது,குறள் எண் | : | 81 |